யாப் ஆ லோய் சாலையின் பெயர்

ஜாலான் பாலஸ்தீன் என மாற்றப்பட்டதா?

மாநகர் மன்றம் மறுப்பு

கோலாலம்பூர், ஆக. 27- கோலாலம்பூரில் உள்ள ஜாலான் யாப் ஆ லோய் சாலைக்கு ஜாலான் பாலஸ்தீன் என மறுபெயரிடப்பட்டுள்ளது என்று சமூக ஊடகங்களில் வெளிவந்துள்ள தகவல்கள் வெறும் வதந்தியே என்று கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று விளக்கியுள்ளது.

எந்தவொரு மாற்றமும் செய்யப்படவில்லை. ஜாலான் யாப் ஆ லோய் எனும் பெயர் ஏற்கெனவே இருந்தபடியே நீடித்து வருகிறது என்று மாநகர் மன்ற அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

முந்தைய அரசாங்கத்தில் கூட்டரசு பிரதேச அமைச்சராக இருந்த டான்ஸ்ரீ அனுவார் மூசாவின் உத்தரவின் பேரில் கடந்த 2020 ஆண்டில் ஜாலான் ராஜா லாவுட் 1 எனும் சாலைக்கு ஜாலான் பாலஸ்தீன் என மறுபெயரிடப்பட்டது என்று அந்த அதிகாரி விளக்கினார்.

இந்த விவகாரம் தொடர்பில் சமூக ஊடகமொன்றில் அண்மையில் இந்த வதந்தி வெளியானது.

ஜாலான் பாலஸ்தீன் வெறும் 80 மீட்டர் நீளம் கொண்ட சாலையாகும். ஜாலான் ராஜா லாவுட் சாலை முழுவதுக்கும் இப்புதிய பெயர் பொருந்தாது என்றும் அந்த அதிகாரி கூறினார். ஜாலான் ராஜா லாவுட் சாலை ஜாலான் துன் பேராக்கில் ஆரம்பித்து ஜாலான் ஈப்போ/ ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மானில் (செளக்கிட்) முடிவடைகிறது. அதே வேளையில், ஜாலான் ராஜா லாவுட் 1 (ஜாலான் பாலஸ்தீன்) கேடிள்யுஎஸ்பி கட்டடத்திலிருந்து தொடங்கி ஜாலான் எஸ்ஃபாஹான் (சோகோ பேரங்காடி) சாலையில் முடிவடைகிறது.

பாலஸ்தீனர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கத்தில் ஜாலான் ராஜா லாவுட் 1க்கு ஜாலான் பாலஸ்தீன் என 2020ஆம் ஆண்டில் மறுபெயரிடப்பட்டது. அப்பெயர் இன்னும் நீடித்து வருகிறது என்றும் அந்த அதிகாரி கூறினார்.